மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 23.09.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

17) தற்போது என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை சாட்சியத்திலுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால், சரிதான். என் பிரமாண பத்திரிக்கையில் 4 ம் பத்தியில் ச.எண்.65/10 ல் உள்ள 0.92 செண்ட் நிலத்திற்கு என் தந்தை இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, அதில் கடந்த 31.01.2014 ம் தேதி தீர்ப்பு பெற்றுள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். அவ்வாறுள்ள நிலையில் பிரதிவாதிகள் மேற்படி அ.வ.எண்.183/2013 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை செயல்படுத்த கூடாது என மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் இடைகால தடை உத்தரவு பெற்றுள்ளனர் என்றால், தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனக்கு தெரியாது. ஆனால், அதற்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளது தெரியும். மேற்படி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுவின் பேரில் கடந்த 06.02.2024 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் வலைதள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.22 (Ex.A22)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

18) அவ்வாறு மேற்படி அ.வ.எண்.183/2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதால், முன்தடை தீர்ப்பு கோட்பாடு இவ்வழக்கிற்கு பொறுந்தாது என்றால், சரிதான். அ.வ.எண்.183/2013 என்ற வழக்கில் உள்ள ச.எண்.65/10 என்றால், சரியல்ல. ச.எண்.65/10A ஆகும். அவ்வாறுள்ள நிலையில் என் பிரமாண பத்திரிக்கை பத்தி 4 ல் ச.எண்.65/10 என குறிப்பிட்டிருந்தால், அது தவறானது என்றால், சரிதான். அவ்வாறெனில் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையே தவறானது என்றால், சரியல்ல.

19) ச.எண்.65/10 ல் மொத்தம் எவ்வளவு நிலம் என்றால், 0.92 சென்ட் உள்ளது. மேற்படி 0.92 சென்ட் நிலமும் எங்களுக்கு பாத்தியப்பட்டதா என்றால், ஆமாம். மேற்படி ச.எண்.65/10 ல் பத்திரப்படி எங்களுக்கு எவ்வளவு பாத்தியம் என நான் சொல்கிறேன் என்றால், 0.46 சென்ட் பாத்தியம். பரிமாற்றத்தின்படி எவ்வளவு பாத்தியம் என சொல்கிறேன் என்றால், 0.46 சென்ட் பாத்தியம் என சொல்கிறேன். மேற்படி பரிமாற்றத்திற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால், இல்லை. நான் சொல்வது போல் மேற்படி பரிமாற்றம் செய்ததாக சொல்வது தவறானது என்றாலும், தற்போது வரை மேற்படி ச.எண்.65/10 ல் உள்ள 0.92 சென்ட் நிலத்தையும் பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகின்றனர் என்றால், சரியல்ல.

20) என் பாட்டனார் பழனியப்ப கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்றால், சரிதான். மேற்படி பழனியப்ப கவுண்டரின் முதல் மனைவியின் பெயர் என்னவென்றால், தானம்மாள். மேற்படி பழனியப்ப கவுண்டர்–தானம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், ஒரு ஆண் வாரிசும், இரண்டு பெண் வாரிசுகளும் உள்ளனர். மேற்படி ஆண் வாரிசின் பெயர் என்னவென்றால், மாரியண்ணன் (எ) மாரியப்பன். மேற்படி மாரியப்பனுக்கும், என் தந்தைக்கும் இதே நீதிமன்றத்தில் ஒரு பாகபிரிவினை வழக்கு நடந்தது என்றால், சரிதான். மேற்படி வழக்கு எந்த சர்வே எண்ணிற்குரிய சொத்து தொடர்பானது என்றால், ச.எண்கள்.65/11, 65/12, 65/13, 65/14, 66/4A, 66/4B, 66/5, 65/10C2 இவற்றுடன் சேர்த்து இன்னும் மூன்று சர்வே எண்கள் உள்ளன. மேற்படி வழக்கில் ச.எண்.65/10 வழக்கு சொத்து இல்லை என்றால், சரிதான். மேற்படி சொத்து என் பாட்டி பெயரில் இருந்ததால், அது சேர்க்கவில்லை.

21) என் பாட்டனார் பழனியப்ப கவுண்டரின் இரண்டாவது மனைவி பெயர் என்னவென்றால், சின்னு (எ) சின்னம்மாள். மேற்படி பழனியப்பன்–சின்னம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால், என் தந்தையும், என் அத்தையும் என இரண்டு வாரிசுகள். என் பிரமாண பத்திரிக்கையில் எந்த சர்வே எண்ணிலுள்ள நிலத்தை மாரிமுத்துவிற்கு நாங்கள் பரிமாற்றம் செய்ததாக சொல்கிறோம் என்றால், ச.எண்.66/13 ல் உள்ள கொடுத்தோம். எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என சரியான

நினைவில்லை. அதற்கு பதிலான எந்த சர்வே எண்ணில், எவ்வளவு நிலத்தை பெற்றுக்கொண்டோம் என்றால், மாரிமுத்துவிடமிருந்து நாங்கள் நேரடியாக நிலத்தை பெறவில்லை. மாறாக மேற்படி மாரிமுத்து, கந்த கவுண்டர் மற்றும் பழனியம்மாளுக்கு ச.எண்.65/8 ல் நிலத்தை கொடுத்துள்ளார். எவ்வளவு நிலம் கொடுத்தார் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி கந்த கவுண்டர் மற்றும் பழனியம்மாளும் என் பாட்டி சின்னு (எ) சின்னம்மாளுக்கு ச.எண்.65/10 ஐ பரிமாற்றம் செய்துள்ளனர். என் பாட்டி நேரடியாக எந்த நிலத்தையும் கந்த கவுண்டருக்கோ, பழனியம்மாளுக்கோ கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

22) மேற்படி மாரிமுத்து மற்றும் கந்தகவுண்டர் அவரது மனைவி பழனியம்மாள் ஆகியோருக்கிடையே எந்த நிலங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். என் தந்தை கூறியதன் அடிப்படையில் எனக்கு தெரியும். மேற்படி பரிவர்த்தனை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ஆரம்பத்திலிருந்தே ச.எண்.65/10 ல் உள்ள 0.92 சென்ட் நிலமும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. என்னிடம் கிரய பத்திரம் உள்ளது.

23) ராமசாமி, ஏழுமலை ஆகியோருக்கு ச.எண்.10/9A2, 10/8A2 என நிலங்கள் இருந்ததாக நான் சொல்லியுள்ளது தவறானது என்றாலும், அவ்வாறு அவர்களுக்கு எந்த நிலங்களும் பாத்தியப்படவில்லை என்றாலும், சரியல்ல. எங்கள் நிலத்திற்கு எந்த பகுதியில் வாதிகள் உள்ளனர் என்றால், வடக்குபுறத்தில் உள்ளனர். அதாவது வாதிகளின் நிலத்திற்கு தெற்கில் நாங்கள் உள்ளோம் என்றால், சரிதான். என் பிரமாண பத்திரிக்கையில் வடக்கில் நாங்களும், தெற்கில் வாதிகளும் உள்ளதாக சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான்.

24) எது சரியானது என்றால், வடக்கில் வாதிகளும், தெற்கில் நாங்களும் உள்ளோம் என்பது தான் சரியாது. அ.வ.எண்.183/2013 என்ற வழக்கை நாங்கள் எதற்காக தாக்கல் செய்தோம் என்றால், ச.எண்.65/10A ல் உள்ள கூட்டு கிணறை பிரதிவாதிகள் எங்களை தண்ணீர் எடுக்க கூடாது என தடுத்ததால் மேற்படி வழக்கை தாக்கல் செய்தோம். நான் சொல்வது தவறானது என்றாலும், நாங்கள் மேற்படி கிணற்றில் ஒருபோதும் தண்ணீர் எடுத்ததில்லை என்றாலும், நாங்கள் பிரிதவாதிகளின் நிலத்தை அபகரிக்க வேண்டி அவ்வாறு ஒரு பொய்யான வழக்கை தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல.

25) தற்போதும் மேற்படி கிணற்றில் தண்ணீர் இறைக்கிறோமா என்றால், 2013ம் வருடம் வரை இறைத்தோம் அதற்கு பின் இறைக்கவில்லை. எனக்கு எதன் அடிப்பைடியில் மின் சார வாரியத்தில் பணி கிடைத்தது என்றால், ச.எண்.65/10C1 மற்றும் ச.எண்.65/11ல் உள்ள எனது நிலத்தை நில ஆர்ஜிதம் செய்ததற்கு ஈடாக எனக்கு பணி வழங்கப்பட்டது. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட ச.எண்.65/10ல் உள்ள நிலத்தை ஏமாற்றி எங்களது நிலம் என கூறி நான் மேற்படி பணியை பெற்றுள்ளது சட்டத்திற்கு புறம்பானது என்றால், சரியல்ல.

26) ச.எண்.65/10 எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க எவ்வித ஏற்கத்தக்க ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. ச.எண்.65/10ல் உள்ள நிலத்திற்கு எங்களது பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்யகோரி வாதிகள் மனு செய்துள்ளனர் என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி மனுவின் பேரில் சார் ஆட்சியரும், கோட்டாட்சியரும் நடவடிக்கை எடுக்காததால்தான் வருவாய் துறையினரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து வாதிகள் பரிகாரம் கோரியுள்ளனர் என்றால், சரியல்ல.

27) ராமசாமி மற்றும் தாசன் வகையறா என் தந்தையிடம் அடமானம் வைத்த ச.எண்.65/10ல் உள்ள நிலத்தை மோசடியாக எங்கள் பெயரில் பட்டா செய்து கொண்டோம் என்றால், சரியல்ல. நாங்கள் 1954ல் உண்மையில் கிரயம்

செய்திருந்தால், வருவாய் ஆவணங்களிலும், வில்லங்க பதிவுகளிலும் எங்களது பெயர் வந்திருக்கும் என்னறாலும், அவ்வாறு எவ்வித கிரயமும் செய்யாததால்தான் எங்களது பெயர் இடம்பெறவில்லை என்றாலும், சரியல்ல. என் முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரணாக நான் சாட்சியம் அளிப்பதால், என் சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால், சரியல்ல. வாதிகள் கோரியப்படி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால், சரியல்ல.

(6 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.